1970 நவம்பர் 28]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கூட்டுறவு முறையிலே தொழில் ஆரம்பித்தால் உதவி செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படிக் கூட்டுறவுத்துறையிலே ஆரம்பிக்கப் பல கஷ்டங்கள் ஏற்படலாம். மூலதனம் சேர்ப்பதில் கஷ்டங்கள் ஏற்படலாம். எனவே, அரசாங்கமே முதலில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத்துறையிலே நம்பிக்கை அற்ற நிலையில் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசக் கூடாது. அவர்கள் முயற்சி எடுத்தால் அதை வெற்றிகரமாக முடிக்க முடியும். அவர்களே முன்வந்து தலைமை வகிக்கலாம். பணத்தைப்பற்றிய கவலை வேண்டாம். கூட்டுறவுத்துறையில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அளிப்பதற்கு அதற்காக என்று தனி வங்கி நம்முடைய மாநிலத்திலேதான் இந்திய நாட்டிலேயே இருக்கிறது.

Cauvery river Modernisation Scheme.

* 52 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:
THIRU S. DURAISWAMY:

Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the World Bank has come forward to finance the Cauvery River Modernisation Scheme of the Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்திலுள்ள பழைய டெல்டாப் பகுதியை ரூ. 49 கோடி செலவில் புதுப்பிப்பதற்கான திட்ட அறிக்கையொன்று தயாரித்து மத்திய நீர் மின்சக்தி ஆணைக்குழுவின் வாயிலாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கிக்குழு இத் திட்டம் குறித்து மதிப்பீடு செய்தது. இத் திட்டத்தின் பயன் தேவைகளை அக்குழு ஏற்றுக்கொண்டது. இத் திட்டம் இப்போது மத்திய அரசிடம் முடிவுறா நிலையிலுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மத்திய அரசிடம் முடிவுறாத நிலையிலிருப்பதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு விரைவிலே அனுமதி பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அப்பொழுது அந்த வேலையைத் துவங்கலாம்.

Lands acquired near railway station at Sundaraperumalkoil

* 53 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether wet paddy field nearly half an acre was acquired by the side of railway gate near the railway station at Sundaraperumalkoil (Thanjavur district) to straighten the road between Kumbakonam and Thanjavur;